


தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (3.12.2024) கடலூர் மாவட்டம், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக கூட்டரங்கில் ஃபெஞ்சல் புயல் பாதிப்பு, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் .எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் .வி. செந்தில்பாலாஜி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.ஐயப்பன், சபா.இராஜேந்திரன், எம்.ஆர். இராதா கிருஷ்ணன், மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரி ராஜா, சிறப்பு கண்காணிப்பு அலுவலர் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன் தீப் சிங் பேடி, மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் க.நந்தகுமார், தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டு திட்ட இயக்குநர்/மாவட்ட கண்காணிப்பு அலுவலர் சி.அ.ராமன், மாவட்ட ஆட்சித் தலைவர் .சிபி ஆதித்யா செந்தில்குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 47வது பிறந்தநாளை யொட்டி காஞ்சிபுரம் மாவட்டம், பம்மல் தெற்கு பகுதி செயலாளர் வே.கருணாநிதி ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் ஆகியோர் கலந்துகொண்டு 1000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, எஸ்.ஆர்.ராஜா, துணை மேயர் கோ. காமராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### ஃபெஞ்சல் புயல்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளில்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் ஆய்வு!

### அமைச்சர் சு.முத்துசாமி – மாவட்டச் செயலாளர்கள் தே.மதியழகன் எம்.எல்.ஏ. – ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

கிருஷ்ணகிரி, டிச. 5 -

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பெஞ்சல் புயலால் பெய்த தொடர் மழையால் ஊத்தங்கரை பகுதியில் 50.3 செண்டிமீட்டர் மழை பெய்துள்ளதால் நீர்நிலைகள் நிரம்பி வழிகின்றன அதனால் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் கரைபுரண்டு ஓடுகிறது குடியிருப்பு பகுதியில் தண்ணீர் சூந்துள்ளதால் பொதுமக்கள் பாதிப்படைந்துள்ளனர் பாதிப்படைந்த பகுதிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் பொது மக்களை தங்க வைக்கப்பட்டுள்ள முகாம்களுக்கு நேரில் சென்று அவர்களுக்கு ஆறுதல் கூறி நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

பின்னர் அதிகாரிகளிடம் ஆலோசனை செய்து உடனடியாக பாதிக்கப்பட மக்களுக்கு நிவாரண உதவி , மருத்துவ உதவி வழங்கிட உத்தரவிட்டார்.

உடன் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு துறை அமைச்சர் சு முத்துசாமி ,

கிருஷ்ணகிரி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் . சில்பா பிரபாகர் மாவட்ட ஆட்சித் தலைவர் சரயு மாவட்டச் செயலாளர்கள் தே. மதியழகன் எம்எல்ஏ, ஒய். பிரகாஷ் எம்எல்ஏ . முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இ.ஜி.சுகவனம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பி.முருகன், நரசிம்மன், மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ்,

மாநில மகளிர் ஆணைய உறுப்பினர் மருத்துவர் மாலதி நாராயணசாமி , மாநில இளைஞரணி துணை. செயலாளர் சீனிவாசன்,

செயலாளர்கள் சாவித்திரி கடலரசு மூர்த்தி, சந்திரன், மாவட்ட பொருளாளர்கதிரவன், ,ஊத்தங்கரை ஒன்றிய சேர்மன் உஷா ராணி குமரேசன், ஒன்றிய செயலாளர்கள் குமரேசன், ரஜினி செல்வம், எக்கூர் செல்வம், குண. வசந்தரசு, சாந்தமூர்த்தி, அறிஞர் ,ராஜேந்திரன், ஊத்தங்கரை பேரூர் செயலாளர் தீபக், பேரூராட்சி தலைவர் அமானுல்லா, மற்றும் ஏராளமானோர் உடன் இருந்தனர்.

### அனைத்து சமுதாய நலக் கூடங்களும் டிசம்பர் 2025க்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்!

# ரூ.65 கோடியில் - வடசென்னை பகுதியில் 7 சமுதாய நலக்கூடங்கள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, டிச. 5 -

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் ரூ.65 கோடி மதிப்பீட்டில் வடசென்னை பகுதியில் 7 சமுதாய நலக்கூடங்கள் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அனைத்து சமுதாய நலக்கூடங்களும் டிசம்பர் 2025க்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என்று சேத்துபட்டு, ஹாரிங்டன் சாலையில் சி.எம்.டி.ஏ. சார்பில் ரூ.10 கோடியில் கட்டப்படவுள்ள சமுதாய நலக்கூடத்தை ஆய்வு செய்தபின் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று முன்தினம் (3.12.2024) வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதி, மண்டலம்8, வார்டு 96, நியூ ஆவடி சாலை, காந்தி நகரில் ரூ.85.54 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய 500 எண்ணிக்கையிலான குடியிருப்புகளையும், எழும்பூர் சட்டமன்றத் தொகுதி, மண்டலம்8, வார்டு 108, சேத்துபட்டு, ஹாரிங்டன் சாலையில் சிஎம்டிஏ சார்பில் ரூ.10 கோடியில் கட்டப்படவுள்ள சமுதாய நலக்கூடத்தையும், துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மண்டலம்5, வார்டு60, இராயபுரம், கிளைவ் பேட்டரியில் சிதலமடைந்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய பழைய குடியிருப்புகளையும், மண்டலம்5, வார்டு57, ஜார்ஜ் டவுன், பிராட்வே சாலை, பி.ஆர். என் கார்டனில் ரூ.85.68 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் புதிய தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய 504 குடியிருப்புகளையும் மற்றும் மண்டலம்5, வார்டு59, எல்லிஸ் புரத்தில் சிதலமடைந்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய பழைய குடியிருப்புகளையும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :-

முதலமைச்சர் அவர்கள் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டதைத் தொடர்ந்து வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் ரூ.65 கோடி மதிப்பீட்டில் வடசென்னை பகுதியில் 7 சமுதாய நலக்கூடங்கள் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் வால்டாக்ஸ் ரோடு, தண்ணீர் தொட்டி தெருவிலும், திரு. வி.க. நகர் சட்டமன்றத் தொகுதியில் கொன்னூர் நெடுஞ்சாலையிலும், சந்திர யோகி சமாதியிலும், பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியில் சென்ட்ரல் அவென்யூவிலும், திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதியிலும், மாதவரம் சட்டமன்ற தொகுதி, புழல் விளாங்காடுபாக்கத்திலும் என 6 சமுதாய நலக்கூடங்கள் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இராயபுரம் சட்டமன்றத் தொகுதியில் ஒரு சமுதாயக் கூடம் கட்டப்பட்டு வருகிறது. மேலும் எழும்பூர் சட்டமன்ற தொகுதி, சேத்துபட்டு, ஹாரிங்டன் சாலையில் சிஎம்டிஏ சார்பில் ரூ.10 கோடியில் சமுதாய நலக்கூடம் கட்டப்படவுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி அனைத்து சமுதாய நலக்கூடங்களும் டிசம்பர் 2025க்குள் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்.

அதில் முக்கியமான திட்டங்கள் என்று சொல்ல வேண்டும் என்றால், மக்களுடைய வாழ்வாதாரத்தை உறுதி செய்கின்ற வகையில் தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதி, காந்தி நகரில் சிதலமடைந்த பழைய குடியிருப்புகளை இடித்து ரூ.85.54 கோடி மதிப்பீட்டில் 500 எண்ணிக்கையிலான குடியிருப்புகளும் மற்றும் ஜார்ஜ் டவுன், பிராட்வே சாலை, பி.ஆர். என் கார்டனில் சிதலமடைந்த பழைய குடியிருப்புகளை இடித்து ரூ.85.68 கோடி மதிப்பீட்டில் 504 எண்ணிக்கையிலான குடியிருப்புகளும் கட்டப்பட்டு வருகிறது.

மேலும் இராயபுரம், கிளைவ் பேட்டரியில் சிதலமடைந்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய பழைய குடியிருப்புகளையும் மற்றும் எல்லிஸ்புரத்தில் சிதலமடைந்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய பழைய குடியிருப்புகளையும் இன்று வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, அவர்களும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர். சு.பிரபாகர், அவர்களும் ஆய்வு மேற்கொண்டனர். சிதலமடைந்த அனைத்து குடியிருப்புகளையும் மறுகட்டுமானம் கட்டுவதற்கான அனைத்து நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. இந்த பணிகள் வேகம் எடுக்கின்ற பொழுது அனைத்து பணிகளும் முழுமையாக மக்கள் பயன்பாட்டிற்கு வரும் பொழுது ஏழை எளிய மக்கள் வறுமைக்கோட்டிற்கும் பொருளாதாரத்திலும் நலிவுற்று இருக்கின்ற மக்களுக்கு பேருதவி யாக இந்த திட்டம் அமையும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின்போது வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் வெற்றி அழகன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர். சு.பிரபாகர், மண்டலக் குழுத்தலைவர்கள் கூ. பீ.ஜெயின், ஸ்ரீராமலு, சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ர மூர்த்தி, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய கண்காணிப்பு பொறியாளர் இளம்பருதி, சி.எம்.டி.ஏ. கண்கா ணிப்பு பொறியாளர் ராஜமகேஷ்குமார், செயற்பொறியாளர் திருமதி. விஜய குமாரி, மண்டல அலுவலர்கள் சுரேஷ், திருமதி. பரிதா பானு, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி.தனலட்சுமி, எம்.இசட்.ஆசாத், பரிமளம் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

### தமிழ்நாட்டின் உரிமைகள் – நலன்களுக்காக

# நாடாளுமன்றத்தில் தி.மு.கழக எம்.பி.க்களின் குரல்!

## சரமாரி கேள்வி!

**புதுடெல்லி, டிச.5–**

**நாடாளுமன்றத்தில் தி.மு.க. எம்.பி.க்கள் தமிழ்நாட்டின் நலனுக்காக நேற்று முன்தினம் (3.12.2024) எழுப்பிய சரமாரி கேள்விகள் வருமாறு:–**

**பெண்கள் தலைமையிலான ஸ்டார்ட்–அப்களின் விவரங்களை ஒன்றிய அரசு வெளியிட வேண்டும்.**

**கனிமொழி கருணாநிதி**

இந்தியாவில் மொத்தம் உள்ள பெண்கள் தலைமையிலான ஸ்டார்ட்அப் நிறுவன ங்களின் எண்ணிக்கையை ஒன்றிய அரசு வெளியிட வேண்டும் என மக்களவையில் திமுக எம்.பி. கனிமொழி கருணாநிதி கேட்டுள்ளார்.

அதில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது :

தமிழ்நாட்டில் பெண்கள் தலைமையிலான ஸ்டார்ட்–அப் நிறுவனங்கள் எந்தெந்த தொழில் துறைகளில் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தகம் ஊக்குவிப்புத் துறையின்கீழ் (DPIIT) பதிவு செய்யப்பட்டுள்ளது எனும் தகவல் வெளியிட வேண்டும்.

இந்நிறுவனங்களின் எண்ணிக்கை குறித்த விவரங்களை SC, ST மற்றும் OBC பிரிவுகளின் அடிப்படையில் வழங்க வேண்டும்.

இத்திட்டத்தின்கீழ் கோரிக்கைகள் ஏற்கப்பட்டு இதுவரை தமிழ்நாட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிறுவனங்களின் விவரங்களை வெளியிட வேண்டும்.

ஸ்டார்ட்–அப் நிறுவனங்களின் சுற்றுச்சூழல் அமைப்பை வலுப்படுத்துதல் மற்றும் நிரந்தரமான வளர்ச்சியை உறுதிசெய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள், நிதி, தொழில்நுட்பம் மற்றும் சந்தை வாய்ப்புகளை அணுகுவதில் பெண்கள் தலைமையிலான ஸ்டார்ட்–அப் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் சவால்களை அரசு ஆய்வுசெய்யவும் அவற்றை எதிர்கொள்ள எடுத்திருக்கும் நடவடிக்கைகள் குறித்த விவரங்களையும் வெளியிட வேண்டும்.

**டீ மற்றும் காபி பொருட்களுக்கு MSP நீட்டிப்பு**

**ஆ.ராசா**

தேயிலை மற்றும் காபி போன்ற பயிர்களின் குறைந்தபட்ச ஆதரவு விலையை (MSP) நீட்டிப்பதற்கான கோரிக்கைகள் பெறப்பட்டிக்கின்றதா என திமுக எம்.பி. ஆ. ராசா கேட்டுள்ளார். மேலும் இடைத்தரகர்களினால் தேயிலை மற்றும் காபி தொழில் முனைவோர்கள் பாதிக்கப்படாமல் இருக்க தேநீர், காபி போன்றவற்றின் MSP அதில் அச்சிடப்படுமா எனும் விவரங்களையும் வெளியிட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

**நூறு நாள் வேலைத்திட்டத்தை நூற்றைம்பது நாட்கள் ஆக்குக!**

**கதிர் ஆனந்த்**

ஆறு சதவிகித ஊதிய உயர்வோடு 100 நாட்கள் வேலைத்திட்டத்தை 150 நாட்களாக அதிகரிக்க வேண்டும் என திமுக எம்.பி. கதிர் ஆனந்த் நாடாளுமன்றத்தில் கோரிக்கை வைத்துள்ளார்.

கிராமப்புற மக்கள் குறிப்பாக பெண்கள் பயன்பெறும் வகையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், ஸ்வச்–பாரத், பிரதமரின் அனைவருக்கும் வீடு மற்றும் பல கிராமப்புற மக்கள் மேம்பாட்டு திட்டங்களின் நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்க ஒன்றிய அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பது குறித்து கேள்வி எழுப்பியுள்ள அவர், SC/ST/OBC மற்றும் சிறுபான்மை சமூகங்களுக்கான வேலைவாய்ப்பை உறுதிசெய்யும்தி ட்டங்களை ஒன்றிய அரசு உருவாக்கவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

**உள்நாட்டு எஃகு உற்பத்தித் தொழிலை மேம்படுத்த கோரிக்கை!**

**செல்வகணபதி**

உலகின் கச்சா எஃகு உற்பத்தியில் இந்தியா இரண்டாவது வகிக்கிறது எனும் தகவலின் உண்மை நிலவரம் குறித்து திமுக எம்.பி. செல்வகணபதி நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார். அதேபோல் கடந்த மார்ச் வரையிலான நிதியாண்டில் உலோகக் கலவையின் நிகர இறக்குமதியாளராகவும் இந்தியா இருந்துள்ளதா என கேட்டிருக்கிறார்.

கடந்த ஏழு ஆண்டுகளில் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆயத்த எஃகு இவ்வாண்டு ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரையிலான மாதங்களில் உச்சத்தை எட்டியிருக்கிறது மற்றும் கடந்த ஆறு ஆண்டுகளில் மொத்தம் இறக்குமதி செய்யப்பட்ட ஆயத்த எஃக்கின் உச்சமாக நடப்பாண்டில் 3.7 மில்லியன் மெட்ரிக் டன்கள் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது எனும் செய்திகளின் உண்மைத்தன்மையையும் விளக்கக் கோரியுள்ளார்.

உள்நாட்டு எஃகுத் தொழிலைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு இந்திய எஃகு சங்கம் ஒன்றிய அரசிடம் கோரியுள்ளதா, ஆம் என்றால் அதன் அடிப்படையில் அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய விவரங்களையும் வெளியிடக் கேட்டுள்ளார்.

**PM–KISHAN திட்டத்தின்கீழ் போதிய நிதி உதவி இல்லை!**

**டாக்டர். கலாநிதி வீராசாமி**

பிரதான் மந்திரி கிசான் சம்மான் நிதி (PM-KISAN) திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட நிதி உதவி போதுமானதாக இல்லை என தொடர்ந்து விவசாயிகள் கோரிவருவது குறித்து அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் குறித்து ஒன்றிய அரசு அறிக்கை வெளியிட வேண்டும் என திமுக எம்.பி. டாக்டர் கலாநிதி வீராசாமி நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

விவசாய கச்சாப் பொருட்களின் விலை உயர்வு கணக்கில் கொண்டும் மற்றும் விவசாய குடும்பங்களின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்யும் வகையிலும் அரசின் நிதி பங்களிப்பு இருக்க வேண்டும் என்றும் அதற்குரிய ஆய்வுகளை ஒன்றிய அரசு மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் தன் அறிக்கையில் கேட்டுள்ளார்.

மேலும் விவசாயிகளின் வாழ்வாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பில் தற்போதைய நிதி உதவியின் தாக்கத்தை அறிந்துகொள்ளும் வகையில் அரசாங்கம் விவசாயிகளுடன் ஏதேனும் ஆய்வுகள் அல்லது ஆலோசனைகளை நடத்தியிருந்தால் அதுகுறித்த தகவல்களை வெளியிட வேண்டும் மற்றும் தொடர்ந்து விவசாயிகள் சந்திக்கும் இடையூறுகள் குறித்த விரிவான மதிப்பாய்வு செய்துமுடிக்க அரசு நிர்ணயித்திருக்கும் காலக்கெடுவை அறிவிக்க வேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

**தஞ்சாவூரில் PM–KISHAN திட்டத்தின் நிலை என்ன?**

**முரசொலி**

கடந்த 2019ஆம் ஆண்டு முதல் பிரதான் மந்திரி கிசான் சம்மான் நிதி (PM-KISAN) திட்டத்தின்கீழ் தஞ்சாவூரில் பயனடைந்தவர்களின் பட்டியல், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதித்தொகையின் விவரம் மற்றும் தற்போது ஒன்றிய அரசுக்கு நிதியை உயர்த்தும் திட்டம் ஏதேனும் இருந்தால் அது குறித்த விவரங்களை வெளியிடுமாறு திமுக எம்.பி. முரசொலி நாடாளுமன்றத்தில் விவசாயம் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சரை கேட்டுள்ளார்.

**தமிழ்நாட்டில் கூட்டுறவுகளை வலுப்படுத்த கோரிக்கை!**

**தமிழச்சி தங்கபாண்டியன்**

தமிழ்நாட்டில் கூட்டுறவுகளை வலுப்படுத்த ஒன்றிய அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகளின் விவரங்கள் மற்றும் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் மூலம் தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்ட மொத்த கடன் பற்றிய விவரங்களை வெளியிட வேண்டும் என திமுக எம்.பி. தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் கேட்டுள்ளார்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! எம்.சண்முக சுந்தரம் தலைமையில்

# மனிதநேய உதயநாள்! குடிசை மாற்று வாரிய குடியிருப்பில் 2000 குடும்பங்களுக்கு நல உதவிகள்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார்!

சென்னை, டிச. 5 -

சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மனிதநேய உதயநாளை முன்னிட்டு - குடிசை மாற்று வாரிய குடியிருப்பில் உள்ள 2000 குடும்பங்களுக்கு குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பித்தார்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் மனிதநேய உதயநாளை முன்னிட்டு உதயம்9, பேதமற்ற குடியிருப்பு! சமத்துவத்தின் உயிர்துடிப்பு! எனும் தலைப்பில் குடிசை மாற்று வாரிய குடியிருப்பில் உள்ள 2000 குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நேற்று முன்தினம் (03.12.2024 செவ்வாய்க்கிழமை) மாலை 4.00 மணியளவில், சென்னை, பிராட்வே, டான்பாஸ்கோ பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

இந்நலத்திட்ட விழாவில் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம். சண்முகசுந்தரம் தலைமையில், சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, எஸ்.முரளி, எஸ். இராஜசேகர், எம்.விஜயகுமார், ஜி.எம். தேவன், ப.ஸ்ரீராமுலு எம்.சி, இசட்.ஆசாத் எம்.சி, என். பி.எம்.சேக்அப்துல்லா ஆகியோர் முன்னிலையில் குடிசை மாற்று வாரிய குடியிருப்பில் உள்ள 2000 குடும்பங்களுக்கு குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்.தா. மோ.அன்பரசன் 5 கிலோ அரிசி, 1 கிலோ துவரம் பருப்பு, 1 கிலோ எண்ணை, மிளகாய் தூள் பாக்கெட், 1 போர்வை மற்றும் நிதியுதவி வழங்கி சிறப்பித்தார்.



விழுப்புரம் மாவட்டம், சிறுகடம்பூர் சாவடி தெருவில் நேற்று முன்தினம் (03.12.2024) மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி பெஞ்சல் புயல் காரணமாக பெய்து வரும் கனமழை மற்றும் தீவிர புயல் பாதிப்பு காரணமாக சேதமடைந்த மின் கட்டமைப்பு சீரமைப்பு பணிகளை ஆய்வு செய்து, மின் சீரமைப்பு பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுடன் கலந்துரையாடி வெகுவாக பாராட்டினார். உடன் செஞ்சி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் க. நந்தகுமார், இயக்குநர் (பகிர்மானம்) அ. ரா. மாஸ்கரன்ஸ், மற்றும் உயர் அலுவலர்கள் உள்ளனர்.



பெஞ்சல் புயல் காரணமாக ஏரி தண்ணீர் வீடுகளில் புகுந்து பாதிக்கப்பட்டு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கும், பி.துருஞ்சிப்பட்டி ஜெயந்தி காலனி,பழைய காலனியில், மழையினால் இடிந்த வீடுகளை, பார்வையிட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கும் உணவு,அரிசி, பருப்பு மற்றும் மளிகை பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.ராஜேந்திரன் வழங்கினார்.உடன் தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சாந்தி, தருமபுரி மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முனைவர். பி.பழனியப்பன், பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றியச் செயலாளர் பி.எஸ்.சரவணன் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.